“அழியாப் பெருவாழ்வை நான் பெற்றிட உம்மோடு இருந்திட என்னைத் தூய்மைப்படுத்தி ஆள்வீராக. என்னில் இருக்கின்ற பாவக் கேட்டினை அகற்றுவதோடு நான் என்கின்ற அகந்தையும் என்னிடமிருந்து அகற்றி மெய்யான விந்தையாகிய அருளினால் என்னைச் சூழ்ந்து கொள்வீராக. மெய்மொழிகளாகிய திருமொழிகளாம் விதை கொண்டு எனக்கு உயிரூட்டி என் மனத்தினில் நீர் வாழ்வீராக. உம்மிலே அடைக்கலமாகி நாளும் உம்மைப் பணிந்து தொழுதிட என்னை நீர் ஆட்கொள்வீராக. மெய்மையின் தலைவரே! கிறிஸ்து என்கிற மெய்மையின் தலைவரே! வாழ்வு தரும் திருச்சொற்களின் தலைவரே! மெய் மகிழ்ச்சியின் நற்தலைவரே! உயிர்நிலைதனில் உள்ள பொன்னையொத்த தலைவரே! இறையே! உமக்கே என்றென்றும் வணக்கமும் போற்றியும் அழகு நிறை வெற்றியும் உரியன”.

இப்பாடலைப் பெரும்பாலான திருச்சபைகளில் பாடுவதில்லை. இப்பாடல இசைநயமும், தாளச் சொல்கட்டும் பொருளும் பொதிந்த பாடல், இந்த பாடலின் இராகம் ஆனந்தபைரவி, எந்த வேளையிலும் எல்லாச் சூழ்நிலைக்கும் ஏற்ற இராகம். குறிப்பாக ஊஞ்சல் பாட்டு, தாலாட்டுப் பாடல் பாடுவதற்கு பொருத்தமான இராகம். நமக்கு ஆனந்தபைரவி இராகம் நன்றாகவே தெரியும். ஆனால் இனம் காண்பது தான் நமக்கு கடினம். குறிப்பாக கிறித்தவ கீர்த்தனைகளில் ஆனந்தபைரவி இராகம் அதிகமாக உள்ளது. நாமும் சில பாடல்களை அந்த இராகத்தில் பாடி வருகிறோம். சி.எல்.எஸ்.கீர்த்தனையில் 70வது பாடல் “ஆத்துமமே என் முழு உள்ளமே” என்ற பாடல் ஆனந்த பைரவி இராகம் ஒலிப்பேழையில் உள்ள இராகம் சங்கராபரணம். மற்றொரு பாடல் “தேவனே நான் உமது அண்டையில்” என்ற பாடலும் ஆனந்த பைரவி இராகம் தான். ஆகவே ஆனந்த பைரவி என்ற இராகம் நமக்கு நன்கு அறிமுகமான இராகம்தான். குறிப்பாக மரியான் உபதேசியார் எழுதி நமக்கு கிடைத்துள்ள 19 பாடல்களில் இந்தப் பாடல் மிகவும் சிறந்த பாடல் என்று சொல்லலாம். தமிழ்நாடு இறையியல் கல்லூரியில் பயிலும் நம் ஆயர்மார்களின் சிறந்த முயற்சியால் இப்பாடலை பல ஆலயங்களில் உரிய இராகங்களில் பாடுவது சிறப்பாகும்.

கீர்த்தனைகளில் உள்ள பாடல்கள் சூழல் சார்ந்த பாடல்களாகவே அமைந்துள்ளன. நூல்கள் பல இப்பாடல்களுக்கான பின்னணியைச் சிறு சிறு குறிப்புகளாகத் தருகின்றன. இப்பாடல் ஆலய மங்கலப்படைப்பு விழாவில் ஆண்டவருக்கு தோத்திரம் சொல்லும் வகையில் அமைந்தப் பாடல். மரியான் உபதேசியார் திருநெல்வேலி மாவட்டத்தில் குளக்காட்டா குறிச்சி என்ற ஊரில் ஆலயம் ஒன்றைக் கட்டினார். இதை கண்ட பிற மதத்தினர் எதிர்ப்புத் தெரிவித்து ஓலையினால் வேயப்பட்ட ஆலயத்திற்கு தீ வைத்தனர். மரியான் உபதேசியாரை கொலை செய்யவும் தேடினர். மிகவும் சோகத்தில் இருந்த மரியான் உபதேசியாருக்கு அவ்வூரின் ஜமீனின் உதவியினால் ஆலயம் நன்முறையில் கட்டப்பட்டு ஆலய அர்ப்பண விழாவில் ஆண்டவருக்கு தோத்திரம் செய்த பாடல்தான இப்பாடல்.

மரியான் உபதேசியாருக்கு தொழுநோய் தொல்லை இருந்தது. அதற்கு சித்த வைத்திய முறையில் காலை கதிரவனில் அமர்ந்தால் குணமடையலாம் என்ற மருத்துவரின் சொல்லிற்கு தினமும் காலை கதிரவன் ஒளியில் அமர்ந்திருப்பார். அப்பொழுது இப்பாடலில் உள்ள

சுத்த சுவிஷேச சத்திய மொழியை விஸ்தரிக்க வரந்தாரும் ; நேய

சூரிய கிரண வீரியத்தால் எனக்காரோக்கியம் அருள் கூரும் ;

நித்தம் எனைத்தேவ பத்தியில் நடத்திச் சித்தம் இரங்கி கண்பாரும் ;

--கரம்

நீட்டிக் கிருபையைச் சூட்டிக் கவலையை ஓட்டி என்துயரைத் தீரும் ;

நில்லும், ஐயா, என் பக்கத்தில் நில்லும் ஐயா தினம் நலம்

சொல்லும் ஐயா தீயோன் தனை வெல்லும் ஐயா,

தீதைக் கொல்லும், ஐயா, துய்யா! – தோத்திரம் புகழ்.

என்ற இச்சரணத்தைப் பாடுவாராம். இவ்வாறு கருத்தாழம் நிறைந்த சொல்கட்டுகள் சிறப்பாக அமைந்த பாடல்கள் நம் கீர்த்தனைகளில் அதிகம் உள்ளன. இவைகளுக்கு பொருளும், அதன் சூழலும் அறிந்து பாடினால் எத்துணை நன்றாக அமையும். நம் திருச்சபைகளில் இவைகளை மக்கள் அறிய நாம் உதவுவோம்.

**கவி பதின்மன்**